Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MARCH 5, 2024

செவ்வாய்க்கிழமை மார்ச் 05, 2024 | ஒளி: 09 கதிர் 205 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# தேங்காய் விலை எகிரியதால் ஏற்படப்போகும் தாக்கம்

தேங்காய் விலை அதிகரிப்பினால் சாப்பாட்டுப்பொதி மற்றும் கறி வகைகளின் விலைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் இதற்கு காரணம் பெரும்பாலான கறிகள் தேங்காய் பாலை கொண்டு தயாரிக்கப்படுகிறதெனவும் உணவுத் தொழில்துறை தொழிற்சங்கங்கள் ஞாயிற்றுக்கிழமை (03) தெரிவித்துள்ளன. தொடர்ச்சி P2



# மின் கட்டணம் அதிரடியாக குறைப்பு

மின் கட்டணம் திங்கட்கிழமை (04) நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் 21.9 சதவீதத்தால் குறைக்கப்படுவதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை (04) ஊடக சந்திப்பில் கலந்துகொண்டபோதே பேராசிரியர் மஞ்சுள பெர்ணான்டோ இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, 30 அலகுகளுக்கும் குறைவான மின் பாவனையாளர்களுக்கு தற்போது அறவிடப்படும் 12 ரூபா, 8 ரூபாவாக குறைக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தொடர்ச்சி P2




# அதிவிசேட வர்த்தமானி

மின்சாரம் வழங்கல் மற்றும் பெற்றோலிய உற்பத்தி மற்றும் எரிபொருளின் விநியோகம் ஆகிய அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கும் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உத்தரவின் பேரில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் ஞாயிற்றுக்கிழமை (03) வெளியிடப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2




# 14 மாதங்களில் 42 புதிய சட்டங்கள் நிறைவேற்றம்

நாட்டில் ஏற்படுத்தப்பட வேண்டிய புதிய பொருளாதார மாற்றத்திற்காக கடந்த 14 மாதங்களில் 42 புதிய சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இளம் சட்ட வல்லுநர்களுடன் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) ஞாயிற்றுக்கிழமை (03) நடைபெற்ற “வட்ஸ் நியூ” எனும் கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார். தொடர்ச்சி P2

# இன்று கையளிக்கப்படும் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை


**சபாநாயகரின் செயற்பாடுகள் ஒருதலைப்பட்சமானவை**

**சுயாதீனத்துக்கும் பாதகமாக அமையும்**

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தியினர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் இன்று செவ்வாய்க்கிழமை (05) கையளிக்கவுள்ளனர்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்குப் பிரதான எதிர்க்கட்சி உட்பட பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்கவுள்ள நிலையில், பிரேரணையைத் தோற்கடிப்பதாகப் பிரதான ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன குறிப்பிட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்த யோசனைகளைப் பாராளுமன்ற குழுநிலை வேளையில், சபாநாயகர் நிறைவேற்றத் தவறியுள்ளார் என்றும் அவர் அரசியலமைப்பையும், பாராளுமன்றத்தின் கோட்பாடுகளையும் மீறுவதாகக் குற்றஞ்சாட்டி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டுவர தீர்மானித்தது. தொடர்ச்சி P2



# ‘தேயிலை விவசாய உற்பத்தியாளர்கள்’ என அழைக்க வேண்டும்

நம் நாட்டின் முதுகெழும்பாக காணப்படுவது தேயிலையே. எனவே அந்த தேயிலையை உற்பத்தி செய்யும் எமது மலையக மக்களை தோட்டத்தொழிலாளர்கள் என குறிப்பிடப்படாமல் ‘தேயிலை உற்பத்தி விவசாயிகள்’ என அழைக்கப்பட வேண்டுமென மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி தொடர்ச்சி P2





# விலை அதிகரிப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொத்து, ப்ரைட் ரைஸ் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலைகளை அதிகரிப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையான

# மூவரை இலங்கைக்கு அனுப்புமாறு கோரிக்கை

**இலங்கைக்குத் திரும்ப அனுப்பக்கோரி உள்துறை அமைச்சகத்துக்கு விண்ணப்பித்துள்ளதாகவும் தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது**

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டு, முகாமில் உள்ள முருகன், ராபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமாரை இலங்கை அனுப்புவதற்கான அனுமதியை விரைவாக வழங்க, இந்திய அரசுக்கு உத்தரவிட வேண்டுமென தமிழக அரசு சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நோய் வாய்ப்பட்டுள்ள தனது தாயை கவனிப்பதற்காக தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்க உத்தரவிடக் கோரி சாந்தன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்த நிலையில், இந்த மனு, நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், குமரேஷ் பாபு அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, சாந்தன் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டு, அது தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன. தொடர்ச்சி P2



# பொலிஸ் உத்தியோகத்தர் இருவருக்கு மரண தண்டனை

பேலியகொடை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொழும்பு உயர் நீதிமன்றினால் திங்கட்கிழமை (4) மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டு பேலியகொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், குற்றம் நிரூபிக்கப்பட்டதால் இவர்கள் இருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற ஊசி மருந்து இறக்குமதி;

# சமன் ரத்நாயக்க இரகசிய வாக்குமூலம்

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க திங்கட்கிழமை (04) இரகசிய வாக்குமூலம் ஒன்றை வழங்கவுள்ளார்.

மாளிகாகந்த நீதவான் லோச்சனா அபேவிக்ரம விடுத்த உத்தரவின் பிரகாரம் அவர் இந்த வாக்குமூலத்தை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற ஊசி மருந்து கொள்வனவு சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தில் இரகசிய வாக்குமூலமொன்றை வழங்க மாளிகாகந்த நீதவான் லோச்சனி அபேவிக்ரம வீரசிங்க முன்னிலையில் னிக்கிழமை 02ஆம் திகதி அவர் விருப்பம் தெரிவித்திருந்தார்.

அதற்கிணங்க குற்றவியல் சட்டக் கோவையின் 127ஆவது சரத்துக்கு இணங்க நன்றாக சிந்தித்து, சுயாதீனமாக, எந்த வெளி அழுத்தங்களும் இன்றி இந்த இரகசிய வாக்குமூலத்தை வழங்குவதற்கு விருப்பமா என அதன் போது மாளிகாகந்த நீதவான் சந்தேகநபரிடம் வினவினார். தொடர்ச்சி P2

# கல்வியில் மாற்றம் தேவை

பாடசாலைகளுக்கு தீ வைக்க முடியாது போனதால் இன்று தற்போதைய கல்வி முறையை மாற்றங்களுக்கு உட்படுத்த இடமளிக்காதுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2




# “உயிர்ச்சேதம் ஏற்பட்டாலும் எதிர்ப்பை வெளியிடுவதே அடுத்த இலக்கு”

**கடல் வழியாக இலங்கை எல்லை வரை எமது கறுத்தக் கொடிப் போராட்டத்தை முன்னெடுத்தோம்**

மீனவ கோரிக்கைகளை இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் எமது அடுத்த போராட்டம் உயிர்ச்சேதம் ஏற்பட்டாலும் இந்தியா எல்லைக்குள் நுழைந்து எமது எதிர்ப்பை வெளியிடுவதே அடுத்த இலக்கு என யாழ்ப்பாண மாவட்ட கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் ரட்ணகுமார் தெரிவித்தார்.


பருத்தத்துறை பகுதியிலிருந்து இலங்கை கடல் எல்லை வரை ஞாயிற்றுக்கிழமை(3) இடம்பெற்ற இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகைக்கு எதிரான கறுத்தக்கொடி போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மின் கட்டணம் அதிரடியாக குறைப்பு



அதன்படி, 33.3 சதவீதத்தால் அது குறைக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதேபோல், 31 முதல் 60 அலகு வரையான மின் பாவனையாளர்களுக்கு 28 சதவீதம் மின் கட்டணம் குறைக்கப்படவுள்ளது.

மேலும், 60 முதல் 90 அலகு வரையிலான மின் பாவனையாளர்களுக்கு 30 சதவீதம் மின் கட்டணம் குறைக்கப்படவுள்ளது.

அதேபோல், 90 முதல் 180 வரையிலான பாவனையாளர்களுக்கு 24 சதவீதம் மின் கட்டணம் குறைக்கப்படவுள்ள நிலையில், மத ஸ்தானங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு 33 சதவீதத்தாலும், ஹோட்டல்கள் மற்றும் தொழிற்துறைகளுக்கு 18 சதவீதத்தாலும் மற்றும் பொது நோக்கத்திற்கான மின் பாவனைக்கு 23 சதவீதத்தாலும் மின் கட்டணம் குறைக்கப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# தேங்காய் விலை எகிரியதால் ஏற்படப்போகும் தாக்கம்

நாட்டில் வழமையாக 60 முதல் 80 ரூபா வரையில் இருந்த தேங்காயின் விலை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ருக்ஷான் ஹர்ஷன குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது ஒரு தேங்காயின் விலை 120 ரூபாவிலிருந்து 150 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறு அதிகரித்துள்ள தேங்காய் விலையினால் சாப்பாட்டுப்பொதி ஒன்றைத் தயாரிக்க முடியாமல் சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இதனால் உணவுப் பொதிகளை அதிக விலைக்கு விற்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

அரிசி, கோழிக்கறி, முட்டை, எரிவாயு உள்ளிட்ட அனைத்தும் கணிசமாக விலை அதிகரித்துள்ள நிலையில் தேங்காய்களின் விலையும் அதிகரித்துள்ளது.

தேங்காய் விலை அதிகரிப்பின் காரணமாக எதிர்வரும் நாட்களில் தேங்காய் எண்ணெய்யின் விலையும் அதிகரிக்கும் என எச்சரித்துள்ளார்.

# விலை அதிகரிப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கை

உணவுப் பொருட்களின் விலைகளை அதிகரிக்க அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்திற்கு எதிராகவே இந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சந்தையில், உணவுப்பொருட்களின் விலைகளைத் தன்னிச்சையாகத் தீர்மானிக்கும் அதிகாரம் தனியார் நிறுவனங்களுக்கு இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாகவே, உணவுப் பொருட்களின் விலைகளை உயர்த்த நேரிட்டதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# இன்று கையளிக்கப்படும்சபாநாயகருக்கு...

நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

சபாநாயகரின் செயற்பாடு எதிர்காலத்துக்கு தவறான எடுத்துக்காட்டாக அமையக்கூடாது என்பதற்காக சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதாக பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.



நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதாக சபாநாயகரின் பதவி நிலை காணப்படுகிறது. சபாநாயகர் மீது நம்பிக்கையில்லை என்று எதிரணி குறிப்பிட்டால் அவர் பதவிவிலக வேண்டும். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் செயற்பாடுகள் ஒருதலைப்பட்சமானவை என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை குறிப்பிட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா சட்டவாக்கத்துறைக்கு பொறுப்புக் கூறுவதைத் தவிர்த்து நிறைவேற்று அதிகாரத்தின் பிரதிநிதியாக செயற்படுகிறார். தனது அதிகாரத்தை நிறைவேற்றுத்துறையிடம் விட்டுக்கொடுக்கிறார். இவ்வாறான செயற்பாடுகள் சட்டவாக்கத்துறையின் மேன்மைக்கும், சுயாதீனத்துக்கும் பாதகமாக அமையும். ஆகவே சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்போம் என தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்டுள்ளது.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையைத் தோற்கடிப்போம். ஏனெனில், பெரும்பான்மைப் பலம் எம்மிடமே உள்ளது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறான நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியினர் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் இன்று கையளிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிவிசேட வர்த்தமானி

அதன்படி, எந்தவொரு பொதுக் கழகம், அரசாங்கத் திணைக்களம், உள்ளூராட்சி அதிகாரசபை, கூட்டுறவுச் சங்கம் திணைக்களம், கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்படும் சேவைகள் அவசியமானதாகக் கருதி குறிப்பிட்ட சேவைகள் அத்தியாவசியப் பொதுச் சேவையாக அறிவிக்கப்பட்டுள்ளதாக பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள கூட்டுறவு சங்கம், சமூகத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாதது மற்றும் தடையாகவோ அல்லது குறுக்கிடவோ வாய்ப்புள்ளது.

# கல்வியில்...

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் 118ஆவது கட்டமாகரூ.10 இலட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், மொனராகல, புத்தல, கோனகங்ஆர வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் திங்கட்கிழமை (04) தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அன்று பாடசாலைகளுக்கு தீ வைக்க முடியாது போனதால் இன்று தற்போதைய கல்வி முறையை மாற்றங்களுக்கு உட்படுத்த இடமளிக்காதுள்ளனர். இது இப்படியே போனால் 41 இலட்சம் பாடசாலை மாணவர்களின் எதிர்காலத்தையும் இவர்கள் அழித்துவிடுவார்கள். பாடசாலைகளுக்குத் தீ வைத்த புரட்சியாளர்கள், நாட்டின் பிள்ளைகள் தங்கள் சொந்த பிள்ளைகளை விட முன்வந்துவிடுவார்களோ என்று பயந்து கல்வியை நவீனமயமாக்க அனுமதிப்பதில்லை. அன்று பாடசாலைகளுக்கு தீ வைத்தவர்களும், இன்று கல்வி நவீன மயமாவதை எதிர்க்கும் கூட்டமும் ஒரே கூட்டமே. இவர்கள் தமது பிள்ளைகளை தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பித்து வருகின்றனர்.

மேலும், சட்டம் வேண்டாம் என்று கூறிய புரட்சியாளரின் பிள்ளையும் தனியார் பல்கலைக்கழத்திலயே பட்டம் பெற்றது. சட்டத்தை எதிர்த்த ஒரு புரட்சியாளரின் பிள்ளை சமீபத்தில் ஒரு தனியார் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றது. இது ஒருவகையில் மகிழ்ச்சியான விடயம் போலவே துக்ககரமான விடயமும் கூட. நாட்டின் ஒவ்வொரு எல்லாப் பிள்ளைகளும் இவ்வாறான தனியார் கல்வியைப் பெறமுடியுமா என்பதில் சிக்கல் இருக்கின்றது.

தற்போதுள்ள இலவசக் கல்விக்கு கேடு விளைவிக்காத வகையில் இன்னொரு கல்வி முறையை உருவாக்குவதற்கு எதிராக இந்த கபட புரட்சியாளர்கள் குரல் எழுப்பி வருகின்றனர். தனியார் கல்வியை வலுப்படுத்துவது எனது நோக்கமல்ல. இலவசக் கல்வியை வலுப்படுத்தவும், நமது நாட்டுப் பிள்ளைகளுக்கு கல்விக்கான புதிய வாய்ப்புகளையும் வலுப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளேன்.

நாடு டிஜிட்டல் மயமாக்கப்படும் என கூறினாலும், ஒரு கணினியை கூட வழங்க முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது என்றார்.

# “உயிர்ச்சேதம் ஏற்பட்டாலும் எதிர்ப்பை வெளியிடுவதே அடுத்த இலக்கு”

அவர் மேலும் தெரிவிக்கையில், அத்துமீறிய இந்திய மீனவர்களினால் தொடர்ச்சியாக எமது வாழ்வாதாரம் அழிக்கப்பட்டு வரும் நிலையில், எமது கண்டனத்தையும் எமது ஆதங்கங்களையும் வெளிப்படுத்தும் முகமாக இலங்கை கடல் எல்லை வரை எமது கறுத்தக்கொடி போராட்டத்தை முன்னெடுத்தோம்.

இதற்கு முன்னரும் அத்துமீறிய இந்திய கடற்றொழிலாளர்களை கட்டுப்படுத்துமாறு கோரி பல போராட்டங்களை முன்னெடுத்தோம் ஆனால் தொடர்ந்தும் அவர்களது வருகை இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில், எமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தும் முகமாக கடல் வழியாக இலங்கை எல்லை வரை எமது கறுத்தக் கொடிப் போராட்டத்தை முன்னெடுத்தோம்.

இந்தப் போராட்டம் ஒரு ஆரம்பப் போராட்டமாகவே பார்க்கிறோம். ஏனெனில்

**❝ எமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தும் முகமாக கடல் வழியாக இலங்கை எல்லை வரை எமது கறுத்தக் கொடிப் போராட்டத்தை முன்னெடுத்தோம். இந்தப் போராட்டம் ஒரு ஆரம்பப் போராட்டமாகவே பார்க்கிறோம்**

நாம் எமது கடல் எல்லை வரை போராட்டத்தை முன்னெடுத்தோம் இந்திய எல்லைக்குச் செல்லவில்லை.

இந்தியா எல்லைக்கு செல்வோமாயின் என்ன நடக்கும் என்பதும் எமக்குத் தெரியும், அது பற்றி நாம் கவலைப்பட மாட்டோம்.

எமது கோரிக்கைகளை இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.


தவறும் பட்சத்தில் எமது அடுத்த போராட்டம் உயிர்ச்சேதம் ஏற்பட்டாலும் இந்தியா எல்லைக்குள் நுழைந்து எமது எதிர்ப்பை வெளியிடுவதே அடுத்த இலக்கு என அவர் மேலும் தெரிவித்தார்.

# தங்கத்தின் விலை அதிகரிப்பு

நாட்டில் தங்கத்தின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தங்க சந்தை நிலவரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய திங்கட்கிழமை(4) நிலைவரப்படி, ஒரு பவுண் 22 கரட் தங்கத்தின் விலை 166,950 ரூபாவாகவும் ஒரு பவுண் 24 கரட் தங்கத்தின் விலை 182,050 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

மேலும், 24 கரட் 1 கிராம் தங்கம் 22,760 ரூபாவாகவும் 24 கரட் 8 கிராம் (1 பவுண்) தங்கம் 182,050 ரூபாவாகவும் 22 கரட் 1 கிராம் தங்கம் 20,870 ரூபாவாகவும் 22



கரட் 8 கிராம் (1 பவுண்) தங்கம் 166,950 ரூபாவாகவும் 21 கரட் 1 கிராம் தங்கம் 19,920 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

# 14 மாதங்களில்...

மேலும் 62 சட்டங்கள் பாபாராமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விரைவில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

மேலும், இந்த சட்டங்கள் இம்முறை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாவிட்டால் அடுத்த பாராளுமன்றத்தில் முன்வைத்து நிறைவேற்றப்படும்.

ஜே.ஆர்.ஜெயவர்தன 1977ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தியதைப் போன்று நாட்டின் விரைவான பொருளாதார மாற்றத்திற்காகப் பல புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

அத்துடன், நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளும் சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் அரச நிறுவனங்களின் கட்டமைப்பை மாற்றியமைத்து, அனைத்து அரச கூட்டுத்தாபனங்களையும் நிறுவனங்களாக மாற்றி, அந்த அனைத்து நிறுவனங்களையும் பிரதான கம்பனிகளுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பொது நிதி முகாமைத்துவச் சட்டம், பொதுக் கடன் முகாமைத்துவச் சட்டம், விவசாய நவீனமயமாக்கல் சட்டம் என்பவற்றைப் போன்றே இந்த அனைத்து இலக்குகளை அடையக்கூடிய பொருளாதார மாற்றச் சட்டம் கொண்டு வரப்படும். தற்போதுள்ள முதலீட்டுச் சபைக்குப் பதிலாக முதலீட்டு ஆணைக்குழுவொன்று உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேசிய உற்பத்தி ஆணைக்குழு நிறுவப்படும். அத்தோடு சுற்றுலா தொடர்பான புதிய சட்டம், காலநிலை மாற்றம் தொடர்பான சட்டம், புதிய சுற்றுச்சூழல் சட்டம், சிங்கராஜா, சிவனொளிபாத மலை, ஹோட்டன் சமவெளி, வஸ்கமுவ வனப் பூங்கா என்பவற்றின் பாதுகாப்புக்காக புதிய சட்டங்கள் கொண்டுவர எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், வர்த்தகத் திணைக்களம் நீக்கப்பட்டு, புதிய சர்வதேச வர்த்தக மையங்கள் நிறுவப்பட்டு, வெளியுறவு அமைச்சகத்துடன் இணைந்து பணிகள் செயல்படுத்தப்படும்.

1944ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டங்களே கல்வித்துறையிலும் அமுல்படுத்தப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, கல்வித் துறையிலும் பல புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

# தேயிலை விவசாய உற்பத்தியாளர்கள் என அழைக்க வேண்டும்

நாடு கீழே விழும் போதெல்லாம் தூக்கி விடும் தூணாக இருந்தது தேயிலையே! கொரானா காலத்தில் நாடே பொருளாதாரத்தில் வீழ்ச்சியற்ற போது கைகொடுத்ததும் தேயிலை உற்பத்தியே எனவே நாம் அம்மகத்தான வேலையைச் செய்பவர்களைத் தேயிலை விவசாய உற்பத்தியாளர்கள் என அழைக்க வேண்டும்.

உலகத்தில் தேயிலை உற்பத்தில் முதலிடம் சீனா வகித்தாலும் இலங்கையும் தேயிலை உற்பத்தியில் வளர்ச்சியடைந்து வரும் நாடாக இலங்கை உள்ளது. என அதை உற்பத்தி செய்யும் எம் மலையக சமூக மக்களைக் கௌரவமாகத் தேயிலை விவசாய உற்பத்தியாளர்களென அழைக்க வேண்டும்.தோட்டத்தொழிலாளி, கூலித்தொழிலாளி என்ற பதம் நீக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்லாமல் எதற்கெடுத்தாலும் வீதிக்கு இறங்கிப் போராடி உரிமைகளையும், சலுகைகளையும் பெற வேண்டிய நிலை மாறி அனைத்தையும் வழங்கி ஒரு கௌரவமிக்க சமூகமாக இலங்கையில் வாழ வழிவகைகளை நாட்டு அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தரமற்ற ஊசி மருந்து இறக்குமதி; சமன் ரத்நாயக்க வாக்குமூலம்

அதற்கு தமது தரப்பான சந்தேக நபர் விருப்பம் தெரிவிப்பதாக சந்தேக நபர் சமன் ரத்நாயக்க சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி காஞ்சன ரத்வத்தே குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்தே சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜராகி அந்த இரகசிய வாக்குமூலத்தை இன்று 04ஆம் திகதி வழங்குவதற்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இந்த சந்தேக நபர், குறித்த சம்பவம் தொடர்பான ஏனைய சந்தேக நபர்களுடன் தடுத்து வைக்கப்பட வேண்டும் என குறிப்பிட்ட நீதவான் அவரை மஹர சிறைச்சாலையில் தடுத்து வைப்பதற்கு சிறைச்சாலை அதிகாரிக்கு உத்தரவு பிறப்பித்தார்.

மேற்படி மருந்து கொள்வனவு சம்பவம் தொடர்பில் 11 மணித்தியாலம் மேற்கொண்ட விசாரணையையடுத்து குற்றத்தெடுப்பு விசாரணைத் திணைக்களம் கடந்த முதலாம் திகதி இரவு சந்தேக நபரான சமன் ரத்னநாயக்கவை கைது செய்து 02ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது.

# மூவரை இலங்கைக்கு அனுப்புமாறு கோரிக்கை

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற உத்தரவின்படி, சாந்தனின் உடல் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுவிட்டதாக அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. .

இந்நிலையில், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான இலங்கை தமிழர்களான முருகன், ராபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் திருச்சி முகாமில் இருப்பதாகவும், தங்களை இலங்கைக்கு திரும்ப அனுப்பக்கோரி உள்துறை அமைச்சகத்துக்கு விண்ணப்பித்துள்ளதாகவும் தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, மூன்று பேர் தொடர்பாக இந்த வழக்கில் எந்த உத்தரவும் பிறப்பிக்க இயலாது எனக்கூறிய நீதிபதிகள், மூவரும் தனியாக மனுத்தாக்கல் செய்தால், பரிசீலிக்கப்படும் என தெரிவித்தனர்.

# “அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக கடந்த கால சம்பவங்களை நினைவுபடுத்தும் ஜனாதிபதி”

அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக கடந்த கால சம்பவங்களை நினைவுபடுத்துவதன் மூலம் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முயன்று வருவதாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தனக்கு எதிராக மூன்று விளம்பர உத்திகளை பயன்படுத்தவுள்ளதாக விளம்பர நிறுவனங்களின் உதவியை நாடியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, 1983ஆம் ஆண்டு வன்முறைகள், 1988–89 ஆண்டு வன்முறைகள் மற்றும் 2022 மே 9ஆம் திகதி சம்பவங்களை அடிப்படையாக வைத்து ஜே.வி.பியை இலக்குவைக்க வேண்டும் என இந்த விளம்பர நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தியுடன் தொடர்புபட்ட நபர் ஒருவரிடம் இதற்கான பொறுப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து இந்த விடயம் தெரியவந்துள்ளது.

> 1983ஆம் ஆண்டு வன்முறைகள், 1988–89 ஆண்டு வன்முறைகள் மற்றும் 2022 மே 9ஆம் திகதி சம்பவங்களை அடிப்படையாக வைத்து ஜே.வி.பியை இலக்குவைக்க வேண்டும் என இந்த விளம்பர நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. தேசிய மக்கள் சக்தியுடன் தொடர்புபட்ட நபர் ஒருவரிடம் இதற்கான பொறுப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து இந்த விடயம் தெரியவந்துள்ளது



அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக கடந்த கால சம்பவங்களை நினைவுபடுத்துவதன் மூலம் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்த ஜனாதிபதி முயல்கின்றார் ஜேவிபியின் தலைவர் தெரிவித்துள்ளார்.



## இலஞ்சம் பெற்ற அதிகாரிகளுக்கு விளக்கமறியல்

பேருந்து பாதை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு 35,000 ரூபாய் இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் நுவரெலியா மாகாண போக்குவரத்து அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கக் கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் திங்கட்கிழமை (04) உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்களான சமன் பிரியங்கர அத்துகோரள மற்றும் உதவி முகாமையாளர் லலித் பிரசன்ன ஆகிய இருவருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர் பிரியங்கர அத்துகோரல சில வருடங்களுக்கு முன்னர் பத்து இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்ட , பரல்லாவிட்ட உள்ளூராட்சி சபையின் முன்னாள் தலைவர் உதேனி அத்துகோரலகேவின் மூத்த சகோதரர் என தெரிவிக்கப்படுகிறது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நீதிமன்றில் முன்வைத்த உண்மைகளைப் பரிசீலித்த நீதவான் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

நுவரெலியா வீதி. இலக்கம் 355க்கான பஸ் அனுமதிப்பத்திர சலுகை விலையில் பெற்றுக் கொள்வதற்கு இலஞ்சம் கோரியதாக பஸ்ஸின் உரிமையாளர் செய்த முறைப்பாட்டையடுத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக ஆணைக்குழு நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கார் விபத்தில் ஐவர் காயம்



தம்புள்ளை - ஹபரணை பிரதான வீதி, பல்வெஹர பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஐவர் காயமடையிந்த சம்பவம் திங்கட்கிழமை (04) காலை பதிவாகியுள்ளது.

திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றும், தம்புள்ளையில் இருந்து சீகிரியா நோக்கி வெளிநாட்டவர்களை ஏற்றிச் சென்ற காறொன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்தின் போது காரில் பயணித்த பிரான்ஸ் நாட்டை சேர்ந்த தாய், தந்தை , ஆண் குழந்தை , காரின் சாரதி மற்றும் பஸ்ஸில் பயணித்த பிக்குணியொருவர் காயமடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

> திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றும், தம்புள்ளையில் இருந்து சீகிரியா நோக்கி வெளிநாட்டவர்களை ஏற்றிச் சென்ற காறொன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது

மேலும், விபத்து காரணமாக, போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன், விபத்துக்குள்ளான கார் அருகில் இருந்த சிறிய கடையின் மீது மோதியதில் கடை பலத்த சேதம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “கல்விக்கு முதலிடம், தமிழர் ஐக்கியத்துக்கு சிறப்பிடம்”

தெஹியோவிற்ற தமிழ் மகா வித்தியாலய விஞ்ஞானகூடம் கட்டப்பட மற்றும் உபகரணங்கள் வழங்க, கனடா மற்றும் அமெரிக்கா வாழ் தமிழர்கள் மத்தியில் நிதி சேகரித்து, கனடா தமிழர் பேரவை சாதித்து காட்டியுள்ளது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசனின் கோரிக்கையின் பேரில், கனடா தமிழர் பேரவையின் நிதி பங்களிப்பால், நிர்மாணிக்கப்பட்ட தெஹியோவிற்ற தமிழ் மகாவித்தியாலய விஞ்ஞானகூட அங்குரார்ப்பண விழாவின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.







மேலும் கூறியதாவது, “ முதலாவது கல்வி. இங்கேதான், உலகம் முழுக்க புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் அடைகிறது. எம்மில் பல தேவைப்பாடுகள் இருந்தாலும், பிரதான தேவைப்பாடு, கல்வி என சான்றோர் தீர்மானித்து விட்டார்கள். அதைதான் “கல்விக்கு முதலிடம்” என்கிறோம். கல்வி கிடைத்து விட்டால், ஏனைய எல்லா வளங்களும் வந்து சேர வேண்டிய இடத்தில் வந்து சேர்ந்து, பொருந்தி விடும். அதை கனடிய தமிழர் உணர்ந்து உள்ளார்கள். இலங்கை முழுக்க வாழும் தமிழ் மாணவர்களின் முன்பள்ளி கல்வி முதல், உயர்கல்வி வரை மிகப்பெரும் சவால்களை நமது இனம் எதிர்கொள்கிறது. அவற்றை நாம், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் உடன் பிறப்புகளின் பங்களிப்புடன் வெற்றிகரமாக சந்திப்போம்.

இரண்டாவது, தமிழர் ஒற்றுமை. இந்நாட்டில் தனித்துவ அடையாளங்களை கொண்ட ஈழத்தமிழர், மலையகத்தமிழர் ஆகியோர் மத்தியில் ஏற்படக்கூடிய இயல்பான ஒன்றுசேர்வின் மூலமாகவே இலங்கை வாழ் தமிழர் ஒற்றுமை ஓங்க முடியும். எமக்கு வேறு வழி கிடையாது. அதையும் கனடிய தமிழர் உணர்ந்து உள்ளார்கள். அதன் காரணமாகவே, மலையக தமிழரின் இலங்கை குடிபுகு 200 ஆண்டு பூர்த்தியின் அடையாளமாக நிதி சேகரிப்பை நடாத்தி இந்த பெரும் பணியை ஆற்றி உள்ளார்கள். பல ஆயிர கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழும் எம் தமிழர் எம்மையும் அரவணைகிறார்கள் என்ற செய்தி இன்று இங்கே மலையக தமிழ், பெருந்தோட்ட மக்களை உணர்வு பூர்வமாக சென்று அடைகிறது. இதைவிட தமிழர் ஒற்றுமைக்கு சான்று என்ன வேண்டும்?

இந்நிகழ்வில், கனடா தூதுவர் எரிக் வொல்ஷ், கனடா தமிழர் பேரவை நிர்வாகிகள் டென்டன் துரைராஜா, துஷ்யந்தன், உமாசுதன் சுந்தரமூர்த்தி, அசோகன் தம்புசாமி, எம்.பிகள் ராதாகிருஷ்ணன், சுஜித் பெரேரா, உதயகுமார், பாடசாலை அதிபர் திலகலோஜினி, கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணிதரன் உள்ளிட்ட பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

## தந்தையின் அடியால் சிறுவன் காயம்



தந்தையின் பிரம்பு தாக்குதலால் காயமடைந்த சிறுவனொருவன் மீகஹகிவுல வைத்தியசாலையில் திங்கட்கிழமை (03) அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அராவ, திக்யாய, குருபங்வல பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயதுடைய சிறுவனே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுவனைப் பாடசாலை முடிந்து வந்த உடன் தனது தோட்டத்தைத் துப்பரவு செய்யுமாறு கூறியும் அதைச் செய்யாததால் கோபமடைந்த தந்தை, சிறுவனின் தலை மற்றும் கால்களுக்குப் பிரம்பால் தாக்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்வாறு சிறுவனைப் பிரம்பால் தாக்கியுள்ளதாகவும் அதனைத் தடுக்க முயன்ற போது தன்னையும் தாக்கியதாகக் குறித்த சிறுவனின் தாய் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அராவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் பலி

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருவில் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் திங்கட்கிழமை (04) அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

எருவில் கிராமத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் .

குறித்த இளைஞன் மற்றுமொரு இளைஞன் ஒருவருடன் , நண்பர் ஒருவரின் பிறந்ததின விழாவுக்கு சென்று திரும்பி வருகையில் மோட்டார் சைக்கிளின் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதி அருகிலுள்ள மரமொன்றில் மோதுண்டு இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் பலத்த காயங்களுடன் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு , மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் ஒரு இளைஞர் உயிரிழந்துள்ளதாகவும், மற்றைய இளைஞர் தற்போது மட்டக்களப்பு போதனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



மேலும் , உயிரிழந்த இளைஞனின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## காணாமல் போனவர் சடலமாக மீட்பு

செ . தி . பெருமாள்



நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை(03) மாலையிலிருந்து காணாமல் போயிருந்த நிலையில் திங்கட்கிழமை (04) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சின்னதரவளை தோட்டத்தை சேர்ந்த பாலசுந்தரம் (ராஜமணி) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த நபர் காணாமல் போயிருந்த நிலையில், நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டதுடன், அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த தோட்டப்பகுதியில் அமைந்துள்ள நீர்த்தேக்கத்திற்கு அருகில் தன் உயிரை மாய்த்துக்கொண்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## அதிபரால் பெண் துஷ்பிரயோகம்

சுமணசிறி குணதிலக்க

பாடசாலையின் சிற்றுண்டிச்சாலையை நடத்தி வரும் பெண் ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டின் பேரில் ஞாயிற்றுக்கிழமை (03) கைது செய்யப்பட்ட அதிபரை மொனராகலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

இதன்போது தலா 50,000 ரூபாயளவில், இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்க மொனராகலை மாவட்ட நீதிபதியும் நீதவானுமான திரு.ஏ.எஸ்.ஹிபத்துல்லா உத்தரவிட்டுள்ளார்.

மொனராகலை பிரதேசத்தில் பாடசாலையொன்றில்



சிற்றுண்டிச்சாலையை நடத்தும் 33 வயதுடைய பெண் ஒருவருக்கு குறித்த பாடசாலையின் அதிபர் சிற்றுண்டிச்சாலையில் மின் விளக்குகள் அணைக்கப்படவில்லை எனத் தகவல் அனுப்பி அப்பெண்ணை வரவழைத்துள்ளார்.

இதன்பேரில் குறித்த பெண் பாடசாலையிக்கு சென்று மின் விளக்குகளை அணைத்து திரும்பி வர முற்பட்டுள்ளார்.

அப்போது, குறித்த அதிபர் தனது அலுவலகத்திற்கு வர வைத்து துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண்ணினால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த கைது நடவடிக்கையை மேற்கொள்ளப்படாதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

ஹங்வெல்ல-நிரிபொல பகுதியில் திங்கட்கிழமை (03) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னா ரோஷனின் சகோதரரும் அவரது உதவியாளர் ஒருவரும் பயணித்த கெப் ரக வாகனம் மீது இவ்வாறு துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் நிரிபொல பிரதேசத்தை சேர்ந்த 31 வயதுடைய மன்னா றொஷானின் சகோதரரே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, கெப் ரக வாகனத்தில் பயணம் செய்த மற்றுமொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்ற சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை ஹங்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காகம் கரைய வருகிறது, நரிகள் அதை வரவேற்கின்றன

2019ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நாட்டில் ஜனாதிபதியாக பதிவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்வதிலும், அவரின் வெற்றியிலும் முக்கிய பங்காற்றியவராக பொதுஜன பெரமுனவினரால் ஏழு மூளைகளைக் கொண்டவராக வர்ணிக்கப்படும் பசில் ராஜபக்ஷ திகழ்கின்றார்.

இவர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் எனும் பரபரப்பான தகவலை அண்மையில் அவரின் குடும்ப உறவினரான ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் குடும்பத்தாரின் ஆசீர்வாதத்துடன் இன்று காலை (05) கொழும்பை இவர் வந்தடையவுள்ளதாகவும், அவருக்கு விசேட வாகனத் தொடரணி வரவேற்பு வழங்கப்பட்டு விமான நிலையத்திலிருந்து அழைத்து வரப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

அவரின் கருத்துப்படி நாட்டில் அடுத்த தேர்தலில் முக்கிய பதவிக்கு இவர் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போதைய ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பது தொடர்பில் மொட்டுக்கட்சியின் சில அங்கத்தவர்கள் கருத்து வெளியிட்டு வரும் நிலையில், மொட்டுக் கட்சியின் பிரதான காரணகர்த்தா நாட்டுக்கு மீண்டும் வருகை தந்துள்ளமை ஒரு திருப்பு முனையாக அமையுமா?

கடந்த அரசாங்கத்தில் இவர் நிதி அமைச்சராக இருந்த போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் பாதகமான விளைவுகளை பொது மக்கள் அனுபவித்திருந்தனர். குறிப்பாக நீண்ட வரிசைகளில் காத்திருந்து மக்கள் உயிர் நீத்தமை அடங்கலாக, அத்தியாவசிய பொருட்களைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு, இருளில் மூழ்கினர்.

இந்த வடுக்களை மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். இன்னமும் அதன் தாக்கம் மக்களை வதைக்காமலில்லை. எனவே, இனியும் இவர்களின் கபடத்தனமான செயற்பாடுகளையும், போலி வாக்குறுதிகளையும் மக்கள் கண்டு, கேட்டு ஏமாறுவார்களா என்பது சந்தேகமானதே. எவ்வாறாயினும், மக்களை ஏமாற்றி திசை திருப்தி, தமக்குச் சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொள்வதில் இவர்கள் கெட்டிக்காரர்கள்.

2019ஆம் ஆண்டிலும் அவ்வாறான ஒரு சம்பவம் அரங்கேற்றப்பட்டு ஆட்சியைக் கைப்பற்றினார்கள். இன மோதல்களைத் தோற்றுவிப்பது என்பது இவர்களுக்கு கை வந்த கலை. அதற்கான இவர்களின் கையாட்கள் அமைதியாக இருப்பதையும், வேளை வரும் போது வெளியே வருவார்கள் என்பதும் அறிந்ததே.

அடிமேல் அடி வாங்கி, தமது வாழ்க்கையின் அடிமட்டத்துக்குச் சென்று போர்க் காலத்தில் அனுபவித்ததைப் போன்ற ஒரு சூழ்நிலைக்கு மக்கள் முகங்கொடுத்திருந்த நிலையில், மீண்டும் இவர்களை ஆட்சிபீட மேற்றி, தம் தலையில் தாமே மண்ணை வாரிக் கொட்டிக் கொள்வார்களா?

காக்கை கரைய வருகிறது. நரிகள் அந்த காக்கையைக் கெட்டிக்கார காக்கை எனக் காண்பித்து, ஊளையிடுகின்றன. மீண்டும் நரிகளை நகருக்குள் கொண்டு வருவதா அல்லது காக்கையுடன் சேர்த்து காட்டுக்குள் துரத்திவிடுவதா மக்கள் தீர்மானிக்கட்டும்.


தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# தேர்தல்களே தீர்வு எனும் கபடத்தனமான கற்பிதங்கள்

**மொஹமட் பாதுஷா**

தமிழ் திரைப்படமொன்றில் ஒரு நகைச்சுவைக் காட்சியில், முச்சக்கரவண்டியின் எஞ்சின் 'ஸ்டார்ட்' ஆகாத சந்தர்ப்பத்தில், அந்த ஆட்டோவின் பக்கவாட்டில் உள்ள கண்ணாடியை திருப்பி வைத்தால், பழுது சரியாகி, ஸ்டார்ட் வந்துவிடும் என்று விவேக் சொல்வார்.

இலங்கையில் நிலவும் அரசியல், சமூக, சிவில் பிரச்சினைகளுக்கு முன்வைக்கப்படும் தீர்வுகளைப் பார்க்கின்றபோது, விவேக்கின் இந்த ஆட்டோ கண்ணாடி கொமடிதான் ஞாபகத்திற்கு வருவதுண்டு.

அதாவது நாட்டில் தேர்தல்களை நடத்தினால், ஆட்சி மாற்றமடைந்தால், எம்.பிக்கள் மாறினால், ஆளும் கட்சியில் உள்ளவர்களை எதிர்க்கட்சிக்கும் எதிரணியில் உள்ளவர்களை ஆளும் பக்கமும் இடம்மாற்றி வைத்தால் பிரச்சினைகளைத் தீர்த்து விடும் என்பதுபோலதான் பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

நாட்டில் எழுத்தில் உள்ள சட்டங்களையே சரிவர நடைமுறைப்படுத்தப்படுவது சாத்தியமற்றதாக இருக்கின்ற சூழலில், புதிது புதிதாக சட்டமூலங்களைக் கொண்டு வந்தால், அரசியலமைப்பு திருத்தமொன்றைக் கொண்டு வந்தால் எல்லாம் சரியாகி விடும் என்று தொடர்ச்சியாகக் கூறப்பட்டு வருகின்ற புதினங்களையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றோம்.

இப்போது ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று பரவலாக அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. அதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதான தோற்றமும் கட்டமைக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகள், இனங்கள் மற்றும் சமூகங்களின் பிரச்சினைகள் தீர்வதற்கும், இன ஐக்கியமும் நிம்மதியும் ஏற்பட்டு சமூக, பொருளாதார முன்னேற்றம் உருவாவதற்கும் தேர்தல்கள் நடப்பதே அடிப்படைத் தேவை என்ற கற்பிதங்களுக்குப் பின்னாலுள்ள மறைமுக நோக்கங்களை ஆராய வேண்டியுள்ளது.

இவ்வாறான கருத்தியல்களில் எந்த உண்மையும், நியாயமும் இல்லை. இது காலாகாலமாக நாம் கேட்டும் பார்த்தும் உணர்ந்தும் வருகின்ற கபட கதைகளே அன்றி வேறொன்றுமில்லை என்பதைப் புத்தியுள்ளோர் புரிந்து கொள்வர்.

நாம் இவ்வாறு சொல்வதன் அர்த்தம், தேர்தல்கள் நடைபெறத் தேவையில்லை என்பதல்ல. மாறாக, தேர்தல்கள் ஜனநாயக முறைப்படி உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதில் மறுபேச்சிற்கே இடமில்லை.

ஆனால், நாட்டு மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தேர்தல்களின் கையிலோ, சட்டமூலங்கள் மற்றும் அரசியலமைப்பு திருத்தங்களின் வசமோ இல்லை என்பதையும் அது ஆட்சியாளர்களிடமே உள்ளது என்பதையுமே இப் பத்தி வலியுறுத்துகின்றது.

தேர்தல்கள், சட்டங்கள், யாப்புத் திருத்தங்கள் அல்லது ஒரு குறிப்பிட்ட அரசியல்வாதியை அதிகாரத்திற்கு, பதவிக்குக் கொண்டு வருகின்ற நடவடிக்கைகள்தான் இந்த நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வாகும் என்று இவர்கள் கூறுவது உண்மை என்றால், அது கடந்த காலங்களில் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அப்படி எந்த அபூர்வமும் நிகழ்ந்தேறவில்லை.

கடந்த பத்து வருடங்களிலேயே பல அனுபவங்கள் இதற்கு ஆதாரங்களாக உள்ளன. மஹிந்த ராஜபக்ஷவுக்கு மீண்டும் ஆட்சியை வழங்கினால் நாடு செழித்தோங்கும் என்று 2010 களில் கூறினார்கள். ஆனால், குடும்ப ஆட்சியும் (அளுத்கமை முதல்) இனவாதமும் பெருவளர்ச்சி பெற்று, இன முரண்பாடு துளிர்விட்டது.

2015 இல் மைத்திரிபால சிறிசேன, இந்த தேசத்தின் மீட்பராக முன்னிறுத்தப்பட்டார். நல்லாட்சி அல்லது கூட்டாட்சி வந்தால் மட்டுமே இலங்கையில் இனங்களுக்கு இடையிலான ஒருமைப்பாட்டையும், கூட்டிணைந்த வேலைத்திட்டத்தின் ஊடாக நாட்டின் அபிவிருத்தியையும் கொண்டு வர முடியும் என்று சொல்லப்பட்டது.

இதனை நம்பி மக்களும் வாக்களித்து வெற்றி பெற வைத்தனர். மைத்திரி - ரணில் ஆட்சி ஆரம்பத்திலேயே கோணிப்போனது. நல்லாட்சி என்ற போர்வைக்குள் மறைந்து கொண்டு ஒரு மந்தமான ஆட்சியே முன்னெடுக்கப்பட்டது.

எல்லா சமூகங்களையும் உள்ளடக்கியதான ஒரு கூட்டாட்சியின் தோற்றப்பாடு காண்பிக்கப்பட்ட போதிலும், கொல்லைப்புறங்களில் இனவாதமும் வளர விடப்பட்டது. திகண மற்றும் அம்பாறைக் கலவரங்களும் குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிரான கருத்தியல் போரும் இதற்கு சான்றாகலாம்.

பின்னர் கோட்டபாய ஆட்சி பீடம் ஏறினார். அரசியல் அனுபவமற்ற அதேநேரம் இராணுவப் பின்புலத்தைக் கொண்ட, ஒருவரே இந்த நாட்டுக்குப் பொருத்தம் என்றும், குடும்ப ஆட்சியானது நாட்டின் முன்னேற்றத்திற்குப் பக்கபலமாக அமையும் என்றும் அதற்கு நியாயம் சொன்னார்கள்.

குறிப்பாக, 63 இலட்சம் வாக்குகளைப் பெற்ற சகோதரர் ஜனாதிபதியாக இருக்கின்ற போதும், பசில் ராஜபக்ஷ ஒரு எம்.பியாக உள்ளே வந்தால் மட்டுமே குறிப்பிட்ட சில பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று சொன்னார்கள். அதற்காகப் போராடினார்கள். இதற்காகவே அரசியலமைப்பில் ஒரு திருத்தமும் கொண்டு வரப்பட்டது எனலாம்.

ஆனால், எந்தக் கதைகளும் பலிக்கவில்லை. கோட்டபாயவும் ராஜபக்சக்களும் நாட்டைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கியதையும், நாட்டின் பொருளாதாரமும் சமூக வாழ்வும் காலி முகத்திடலுக்கு வந்ததையும் நாம் இன்னும் மறந்து விடவில்லை.

இப்போது மீண்டும் தேர்தல் பற்றிப் பேசுகின்றார்கள். மேற்குறிப்பிட்ட ஆட்சிக் காலங்களில் கிட்டத்தட்ட 15 -20 வருடங்களாக இந்த நாட்டின் ஆளும் தரப்பிலும் எதிர்த்தரப்பிலும் மாறிமாறி அங்கம் வகித்தவர்கள்தான் இப்போதும் பெரும்பாலும் தேசிய அரசியலில் செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம்.

அவர்களில் ஒரு தரப்புதான் இப்போது தேர்தல் நடைபெற வேண்டும், ஜனாதிபதி புதிதாகத் தெரிவு செய்யப்பட வேண்டும், புதிய நாடாளுமன்றம் வந்தால் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துக் காட்டுவோம் என்றும் கூறுகின்றார்கள்.

அவர்களின் பழைய கூட்டாளிகள் சிலர் மறுபக்கத்திலிருந்து கொண்டு இப்போது தேர்தல் அவசியமில்லை என்று கூறுகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டை கொஞ்சமேனும் சீர்செய்துள்ள போதிலும், பல பிரச்சினைகள் இன்னும் நீடித்துக் கொண்டுதான் இருக்கின்றது. அது தவிர்க்க முடியாதது.

இந்த நாட்டை அதலபாதாளத்திற்குக் கொண்டு சென்றவர்கள் இந்த சூழலைப் பயன்படுத்தி, மீண்டும் தாம் அதிகாரத்திற்கு வந்தால் விடிவு வரும் என்று கூறுகின்ற வெட்கமில்லாத அரசியலைக் காண்கின்றோம்.

இங்கே நன்றாகக் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில், இலங்கையைப் பொறுத்தமட்டில் யாருக்கு அதிகாரம், பதவி இல்லையோ அவர்கள்தான் தேர்தலை, ஆட்சி மாற்றத்தை வேண்டுகின்றனர். அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு இப்போது தேர்தல் நடைபெற்று தமது ஆசனம் பறிபோய்விடக் கூடாது என்ற அச்சமுள்ளது.

யார் எந்தப் பக்கம், எவ்வாறான பதவியில், அதிகாரத்துடனா அதிகாரம் இல்லாமலா இருக்கின்றார்கள் என்பதைப் பொறுத்தே.. ஜனநாயகம் மீதான காதலும், தேர்தல் மீதான ஆசையும் தீர்மானிக்கப்படுகின்றது. சட்டமூலங்கள், யாப்புத் திருத்தங்கள் மீதான அவர்களது ஆதரவும் எதிர்ப்பும் கூட இவ்விதமே வெளிப்படுகின்றது.

யார் என்ன சொன்னாலும் இதுதான் யதார்த்தமாகும்.

மக்களின் பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிந்தால், ஆளும் மற்றும் எதிரணியில் இருப்பவர்கள் அதனைத் தீர்ப்பதற்குத் திறந்த மனதுடன் பணியாற்றினால், அரச இயந்திரமும், அதிகாரிகளும் மக்களுக்கு பொறுப்புக்கூறுபவர்களாக மாறினால், எந்த மாற்றமும் இன்றியே நாட்டை முன்னேற்றலாம்.

இன்று தேர்தல் தேவை எனக் கூறுவோரும், அது அவசரமில்லை எனக் கூறுவோரும், இந்தக் கதைகளை எல்லாம் ஒருபுறம் வைத்து விட்டு, இந்த நாட்டில் வாழ்கின்ற மூவின சமூகங்களுக்கு இடையில் பிரிவினையை ஏற்படுத்தாமல், பிரச்சினைகளை அறிந்து, உண்மைக்குண்மையாக அவற்றைத் தீர்த்து வைக்க முன்னிற்பார்கள் என்றால் மாத்திரமே நாட்டுக்கும் மக்களுக்கும் ஏதாவது நல்லது நடக்கும்.

இல்லாவிட்டால், எந்தத் தேர்தல் நடந்தாலும், யார் ஆட்சிக்கு வந்தாலும், யார் யார் எதிரணியிலும் ஆளும் பக்கமும் மாறி மாறி இடம்பிடித்தாலும் அதனால் பெரிதாக மக்களின் பிரச்சினைகள், நெருக்கடிகள் தீரப் போவதும் இல்லை, நாடு ஒரு அங்குலமேனும் முன்னோக்கி நகரப் போவதும் இல்லை.

மாறாக, புதிதாக அதிகாரத்திற்கு வருபவர்களும் கூட சட்டமூலங்களை, அமைச்சரவை மாற்றங்களை, யாப்புத் திருத்தங்களைக் கொண்டு வருவார்கள். இரண்டு வருடங்களில் மறுதரப்பு மீண்டும் ஒரு தேர்தல் நடைபெற வேண்டும் என்று அறிக்கை விடத் தொடங்கும்.

ஆக மொத்தத்தில் தேர்தல், ஆட்சி மாற்றம், சட்ட ஏற்பாடுகள் என்று நாம் தவணை முறையில் புதிய புதிய பாணிகளில் ஏமாற்றப்படுவோமே தவிர 'அவர்கள்' எல்லாரும் தம்மைத் திருத்திக் கொள்ளாத வரை, வெற்று மாறுதல்களால் மக்களுக்கு நல்லது எதுவும் நடந்துவிடப் போவதில்லை.



## வாழ்வியல் தரிசனம்

எங்களை நாங்கள் தான் அமைதிப்படுத்த வேண்டும். எவரையும் நாம் குழப்புதல் ஆகாது. எமது நடத்தைகளால், வார்த்தைகளால் பிறரின் மனம் துன்பப்பட இடமளித்தலாகாது. அதாவது, எங்களது சொல்லாலும் செயலாலும் எவரது மனமும் குழம்பிட வழிவகுத்தலாகாது.

இத்தகைய கொள்கை நிலையில் வாழ்வது சிரமமானது கிடையாது. தேவையற்ற விமர்சனங்கள், நெஞ்சத்தை நோகடித்தல், பராமுகத்துடன் எவரையும் நிராகரித்தல் போன்ற குணாதிசயங்கள் வெறுக்கத்தக்கச் செயலாகும். சும்மா இருப்பவர்களைத் தொந்தரவு கொடுத்து விளையாடக்கூடாது. கேலி என்ற பெயரிலான உரையாடல்கள், நையாண்டிகள், சேட்டைகள் விரும்பத்தக்கன அல்ல! அதாவது, எங்களது சொல்லாலும் செயலாலும் எவரது மனமும் குழம்பிட வழிவகுத்தலாகாது.

ஒருவர் தனது வாழ்க்கையில் தனக்கான கௌரவம், உரிமை, சுதந்திரம் போன்றவைகளில் அக்கறை கொண்டே இயங்குகின்றார். இந்த நிலையில் அக்கறையுடன் வாழ்பவர், மற்றயவர்களின் மனநிலை பற்றியும் உணரவேண்டும். மனிதன் வெறும் சடப்பொருள் அல்ல; சும்மா இருப்பவர்களைத் தொந்தரவு கொடுத்து விளையாடக்கூடாது. கேலி என்ற பெயரிலான உரையாடல்கள், நையாண்டிகள், சேட்டைகள் விரும்பத்தக்கன அல்ல!

நன்றி -பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### விவசாயிகளின் கோரிக்கை

வவுனியா-பாவற்குளத்திலிருந்து நெற்செய்கைக்கான நீர் திறந்து விடப்படாமையினால் அதன் கீழ் செய்கை செய்யப்பட்ட 125 ஏக்கர் வயல் நிலம் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா - பாவற்குளம் பெரிய நீர்பாசனத்திட்டத்தின் கீழ் இம்முறை பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளிற்கு மாசிமாதம் 15ஆம் திகதி வரை நீர் திறந்து விடப்படுவதாக விவசாய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து, குறித்த காலப்பகுதியில் திறக்கப்பட்ட நீர் நிறுத்தப்பட்டு குளம் மூடப்பட்டது.

கடந்தவருட இறுதியில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக அழிந்து போன எமது காணிகளில் மீளவும் விதைப்பில் ஈடுபட்டிருந்தோம். அத்துடன், குளம் தொலைவில் இருப்பதால் எமது வயலுக்கு நீர் வருவதிலும் தாமதம் ஏற்றப்பட்டது. இதனால் விதைப்பு நடவடிக்கைகளைப் பிந்தியே முன்னெடுக்கவேண்டி ஏற்பட்டது.

தற்போது எமது பயிர்கள் குடலைப்பருவத்தினை எய்தியுள்ள நிலையில் நீர் திறந்து விடப்படாமையினால் அவை அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதேவேளை, குளத்தில் போதிய அளவு நீர் இருக்கின்றது.

அதனை திறந்துவிடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

- க. அகரன்

# ‘வளையம்’



ஐஸ்வர்யா ராஜேஷ் நாயகியாக நடிக்கும் படத்துக்கு ‘வளையம்’ என்று பெயர் வைத்துள்ளனர். இதை அறிமுக இயக்குநர் மனோ பாரதி இயக்குகிறார். ஹீரோவாக தேவ் அறிமுகமாக, ஆக்சஸ் ஃபிலிம் ஃபேக்டரி சார்பில் ஜி. டில்லி பாபு தயாரிக்கிறார். சேத்தன், தமிழ், பிரதீப் ருத்ரா, ஹரிஷ் பெரேடி, சுரேஷ் மேனன் ஆகியோருடன் மேலும் சிலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். மகேந்திர எம். ஹென்றி ஒளிப்பதிவு செய்யும் இந்தப் படத்துக்கு மைக்கேல் பிரிட்டோ ஒளிப்பதிவு செய்கிறார்.

த்ரில்லர் படமான இதன் தொடக்க விழா சென்னையில் நடந்தது. நடிகர் விஜய் சேதுபதி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.



# வதந்திக்கு முற்றுப்புள்ளி

நடிகை நயன்தாராவும் இயக்குநர் விக்னேஷ் சிவனும் காதலித்து கடந்த 2022ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர்.


இந்நிலையில், நயன்தாராவின் ஃபாலோயர்கள் பட்டியலில் விக்னேஷ் சிவன் பெயர் இல்லாததை இரு தினங்களுக்கு முன் நெட்டிசன்கள் கண்டுள்ளனர்.

அவர் பதிவிட்ட புதிரான பதிவும் ரசிகர்களை அதிர்ச்சி அடைய வைத்தது. இதையடுத்து விக்னேஷ் சிவனை, நயன்தாரா ‘அன்பாஃலோ’ செய்துவிட்டதாகவும் இருவருக்கும் பிரச்சனை என்றும் வதந்திகள் பரவின. ஆனால், அடுத்து அவரைப் பின் தொடர்ந்து வதந்திக்கு முற்றுபுள்ளி வைத்தார்.

இன்ஸ்டாகிராமில் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினை காரணமாகவே நயன்தாராவின் பக்கத்தில் சிலருடைய ஃபாலோயர்கள் பெயர் காண்பிக்கப்படவில்லை என்றும் தற்போது அந்தப் பட்டியலில் விக்னேஷ் சிவன் பெயர் மீண்டும் இடம்பெற்றுள்ளது என்றும் நெட்டிசன்கள் கூறியுள்ளனர்.



# ஆன்மீக பயணம்



நடிகை தமன்னா கடந்த 2006இல் ’கேடி’ என்ற திரைப்படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார்.

அவர் அவ்வப்போது ஆன்மீக சுற்றுப்பயணம் செய்யும் தமன்னா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் காசி விஸ்வநாத் கோவிலுக்கு சென்ற புகைப்படங்களை பதிவு செய்துள்ளார். மேலும் அந்த பதிவில் ‘ஹரஹர மகாதேவ்’ என கேப்ஷனாக குறிப்பிட்டுள்ளதை அடுத்த இந்த புகைப்படங்களுக்கு ஏராளமான கமெண்ட்ஸ், லைக்ஸ் குவிந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘தளபதி 69’ படத்தில் முதலமைச்சராக விஜய்?

தளபதி விஜய் நடிக்க இருக்கும் கடைசி திரைப்படம் என்று கூறப்படும் ‘தளபதி 69’ படத்தை இயக்குவது அட்லி என சமூக வலைதளத்தில் ஒரு செய்தி பரவி வருகிறது.

ஏற்கெனவே தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அட்லியிடம் தளபதி விஜய் முதலமைச்சர் ஆக நடிக்கும் ஒரு படத்தை நீங்கள் இயக்கினால் அந்த படத்திற்கு என்ன டைட்டில் வைப்பீர்கள் என்று கேட்டபோது ‘ஆளப்போறான் தமிழன்’ என்ற டைட்டில் வைப்பேன் என்று அட்லீ கூறியிருந்தார்.

அந்த வகையில், அண்மையில், அட்லி, விஜய்யைச் சந்தித்து முதலமைச்சர் கேரக்டர் ஹீரோவாக உள்ள கதையைக் கூறியதாகவும் அந்த கதை விஜய்க்குப் பிடித்து விட்டதால் ‘தளபதி 69’ படம் இதுதான் என்றும் கூறப்பட்டு வருகிறது.

மேலும், இந்த படத்தில் விஜய் ஜோடியாக சமந்தா நடிக்க இருப்பதாகவும் அனிருத் இசையமைக்க இருப்பதாகவும் சன் பிக்சர்ஸ் நிறுவனம் இந்த படத்தை தயாரிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஏற்கெனவே டிவிவி என்ற தெலுங்கு திரைப்பட நிறுவனம் தான் ‘தளபதி 69’ படத்தை தயாரிக்க இருப்பதாக கூறப்பட்ட நிலையில் தற்போது சன் பிக்சர்ஸ் பெயரும் சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது.

இது போன்ற பல செய்தி அவ்வப்போது வந்தாலும், ‘தளபதி 69’ படத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வந்தால் மட்டுமே தயாரிப்பு நிறுவனம், இயக்குநர், மற்றும் இசையமைப்பாளர், நட்சத்திரங்கள் குறித்த தகவல் உறுதி செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.



# சாதனை படைத்த ‘தி கேரளா ஸ்டோரி’



உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ‘தி கேரளா ஸ்டோரி’ திரைப்படம். ஒரு அழுத்தமான படைப்பாக அனைவராலும் பாராட்டைப் பெற்றது.

பெப்ரவரி 16ஆம் திகதி உலகம் முழுக்க டிஜிட்டல் வெளியீடாக வெளியான இப்படம், வெளியான இரண்டு வாரங்களுக்குள் 300 மில்லியன் பார்வை நிமிடங்களைத் தாண்டியது மட்டுமல்லாமல், தெலுங்கானா, கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் ஆந்திராவில் அதிகம் பார்க்கப்பட்ட இந்தி திரைப்படமாகச் சாதனைப் படைத்துள்ளது.



விபுல் அம்ருத்லால் ஷாவின் தயாரிப்பில், சுதிப்தோ சென் இயக்கிய இப்படம், கேரளாவில் இளம் இந்துப் பெண்களை தீவிரவாதிகளாக ஆக்கி, மதமாற்றம் செய்வதாக கூறப்படும் உண்மைச் சம்பவங்களை சுற்றி, அமைக்கப்பட்ட அழுத்தமான படைப்பாகும்.

இப்படம் திரையரங்கில் வெளியான போது, பாக்ஸ் ஆபிஸில் ரூ.300 கோடிக்கு மேல் வசூலித்து சாதனை படைத்தது.

# “சிறுவர்களின் ஆரோக்கியமான வாழ்வை மேம்படுத்துவோம்”







“சிறுவர்களின் ஆரோக்கியமான வாழ்வை மேம்படுத்துவோம்" எனும் தொனிப்பொருளில் அஞ்சல் ஓட்ட காணிவேல் 2024 நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்ட மெய்வல்லுனர் சங்கத்தின் ஏற்பாட்டில், கழகத்தின் தலைவரும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தருமான வீ.ஈஸ்பரன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்றுள்ளது .

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களில் இருந்து 18 பாடசாலைகளை சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் அஞ்சலோட்ட வீரர்கள் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.



இதில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷனி ஸ்ரீகாந்த் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி வைத்துள்ளார்.

எம். எஸ். எம். நூர்தீன்



# புனரமைப்பு வேலைத்திட்டம் மீண்டும் ஆரம்பம்

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாகத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த ஆலங்குடா பாதையின் புனரமைப்பு வேலைத்திட்டம் (ஆலங்குடா சந்தியிலிருந்து கடற்கரை வரையிலான 2.8 கி.மீ) பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமினால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர். அருள்தாசன் மற்றும் அவரது காரியாலய அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினரின் நுரைச்சோலை வட்டார இணைப்பாளர் என்.எம்.ஹஸீப், ஆலங்குடா இணைப்பாளர் பஸ்லி, ஏத்தாலை இணைப்பாளர் அஸ்வர் அலி, கல்பிட்டி இணைப்பாளர் யூ.எம்.ஜின்னா, ஆலங்குடா பிரதேச பிரபல வர்த்தகர் ரியாஸ் உட்பட பலரும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

எம்.யூ.எம்.சனூன்



# கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

புத்தளம் தெற்கு கோட்டத்துக்குட்பட்ட கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது

பாடசாலையின் அதிபர் பீ.எம். முஸ்னியின் வேண்டுகோளுக்கிணங்க ஹுதா லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.எச். சிஹார் ஆசிரியரின் முயற்சியினால் அவுஸ்திரேலியா நாட்டில் வசித்துவருகின்ற சகோதர இனத்தைச் சேர்ந்த ஹேமந்தவின் நிதியிலிருந்து ரீட்மா பவுண்டேஷன் ஊடாக சுமார் பத்து இலட்சம் பெறுமதியில் மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் 310 பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது . அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஹுதா லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சிஹார் கலந்து சிறப்பித்தார்.

எம்.யூ.எம்.சனூன்

# சேவை நலன் பாராட்டு விழா







ஓய்வுபெறும் கல்முனை தமிழ் பிரிவு கோட்டக் கல்விப்பணிப்பாளர் சண்முகம் சரவணமுத்துவிற்கான சேவை நலன் பாராட்டு விழாவும், மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 91/ 92 அணியினரின் ஆறாவது ஒன்று கூடலும் ஞாயிற்றுக்கிழமை (03) பாண்டிருப்பில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வு மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 91/ 92 அணியினரின்ஆறாவது ஒன்றுகூடல் புலன அணியின் தலைவர் வீ.ரி.சகாதேவராஜா தலைமையில் இடம்பெற்றுள்ளதுடன் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய பகுதிகளை சேர்ந்த புலன அணி ஆசிரியர்கள் 50 பேர் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

வி.ரி.சகாதேவராஜா







# தாய்மொழி தின நிகழ்வு



மட்டக்களப்பு திறந்த பல்கலைக் கழகத்தின் தாய்மொழி தின நிகழ்வு பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவி பணிப்பாளர் எந்திரி ஏ.டீ.கமல் நாதன் தலைமையில் மருத்துவ பீட கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்றுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன், கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டுள்ளது.

எம்.எஸ்.எம்.நூர்தீன்



# புதிய பிரதேச செயலாளர் நியமனம்

கற்பிட்டி பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலாளராக பதுளையைச் சேர்ந்த சமில இந்திக ஜயசிங்க வெள்ளிக்கிழமை (01) நியமிக்கப்பட்டுள்ளார்.

எம்.யூ.எம்.சனூன்

காசாவில் ஊட்டசத்து குறைபாடு:

# 15 குழந்தைகள் மரணம்

இஸ்ரேல்-காஸா போர் காரணமாக உணவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், போதிய ஊட்டசத்து இல்லாத்தால் 15 குழந்தைகள் இறந்துள்ளதாக காசா சுகாதாரத்துறை அமைச்சம் தெரிவித்துள்ளது.

இது குறித்து காசா சுகாதாரத்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் அஷ்ரப் அல் கித்ரா கூறியதாவது, காஸாவின் கமால் அத்வான் மருத்துவமனையில் ஊட்டச்சத்து மற்றும் நீரிழப்பு காரணமாக கடந்த சில நாட்களில் குறைந்தது 15 குழந்தைகள் இறந்துள்ளன.



எலக்ட்ரிக் ஜெனரேட்டர் மற்றும் ஒக்ஸிஜன் நிறுத்தம், மருத்துவ திறன்களின் பலவீனம் காரணமாக மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் ஊட்டச்சத்து மற்றும் வயிற்று போக்கால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ள 6 குழந்தைகளின் உயிருக்கு நாங்கள் பயம் கொள்கிறோம் என்றார்.

# உலகின் மிக ஏழ்மையான நாடு



கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள புருண்டி நாடானது உலகின் ஏழை நாடுகளின் பட்டியலில் முதலிடம் வகிக்கிறது.

விவசாயத்தை நம்பியுள்ள இந்நாட்டின், மக்கள் தொகை சுமார் 12 மில்லியனாகும். அதாவது ஒரு கோடியே 20 இலட்சமாகும். இதில் 85 சதவீத மக்கள் மிக கடுமையான வறுமையில் வாடுகின்றனர்.

புருண்டியில் 1996 முதல் 2005 வரை நடந்த இனக்கலவரத்தில் மில்லியன் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். அதோடு, இக்கலவரம் அந்நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கியது. மெல்ல மெல்ல இந்த நாடு பொருளாதாரத்தில் பின்தங்கி உலகின் ஏழ்மையான நாடுகளின் பட்டியலில் முதலிடத்திற்கு வந்தது.

புருண்டியைத் தவிர, மடகாஸ்கர், சோமாலியா மற்றும் மத்திய ஆபிரிக்க குடியரசு உள்ளிட்ட பல நாடுகள் வறுமையுடன் போராடி வருகின்றன.

ரூஹி சென்னட் என்ற யூடியூப் சேனல் வெளிட்டுள்ள தகவலின் படி, இந்நாட்டு மக்களின் ஆண்டு வருமானம் ஆண்டுக்கு 180 டொலர்கள் அதாவது ஆண்டுக்கு 14 ஆயிரம் ரூபாய் தான். இங்கு 3 பேரில் ஒருவர் வேலையில்லாமல், நாள் முழுவதும் உழைத்தாலும், தினமும் 50 ரூபாய் கூட சம்பாதிக்க முடியாத நிலை உள்ளது.

ஐக்கிய நாடுகள் மற்றும் பிற அமைப்புகள் உலகெங்கிலும் உள்ள பல ஏழை நாடுகளின் முன்னேறத்திற்காக பல வகையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இருந்த போதிலும், புருண்டி உட்பட உலகின் பல நாடுகளில் நிலைமை முன்னேற்றமடையவில்லை என்பது தான் உண்மை.

## கர்ப்பமாக்கும் 'கர்ப்பிணி கல்'



வடக்கு போர்ச்சுகலில் பெட்ராஸ் பர்டிராஸ் என்ற மர்மமான மலை உள்ளது.

இது 'பிறக்கும் கற்கள்' என்று அழைக்கப்படுகிறது. இந்த மலை அதிசயமான முறையில் குழந்தை பாறைகளை பெற்றெடுக்கிறதாம். மலையிலிருந்து சிறு குழந்தை போன்ற பாறைகள் மீண்டும் மீண்டும் வெளிவருவது போல் தெரிவதாக சொல்லப்படுகிறது.

அதனால்தான் இது 'அம்மா-பாறை' என்றும் 'கர்ப்பிணி கல்' என்றும் அழைக்கப்படுகிறது. சுமார் ஒரு கிலோமீட்டர் நீளமும், 600 மீட்டர் அகலமும் கொண்ட இந்த மலை கிரானைட் கற்களால் ஆனது. இதன் பாறைகள் சுமார் 300 மில்லியன் ஆண்டுகள் பழமையானவை என்றும் கூறப்படுகிறது.

பெரும்பாலும், 2 முதல் 12 சென்டிமீட்டர் தடிமன் கொண்ட பாறைகள் பாறையின் உச்சியில் இருந்து வெளியேறும், இது மலையின் குழந்தை போல் தெரியும்.

நீங்கள் நெருக்கமாகப் பார்த்தால், இந்த மலையானது இந்த சிறிய ஓவல் பாறைக் கட்டிகளால் சூழப்பட்டிருப்பதைக் காணலாம். அதன் வெளிப்புற அடுக்கு பயோடைட்டால் ஆனது, இது ஒரு வகை மைக்கா ஆகும். மழை அல்லது பனி நீர் அதன் விரிசல்களில் ஊடுருவி, குளிர்காலம் வரும்போது அது முற்றிலும் உறைந்துவிடுகிறது.

# "பிரேசில் பெண்ணின் அழுகுரல் மோடியின் காதுகளில் கேட்கவில்லையா?"

"பிரேசில் பெண் வட இந்தியாவில் 7 பேரால் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டபோது, எழுப்பிய அழுகுரல் பிரதமர் மோடியின் காதுகளில் கேட்கவில்லையா?" என அமைச்சர் மனோதங்கராஜ் பிரதமர் மோடியிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஸ்பெயின் - பிரேசிலைச் சேர்ந்த ஒரு தம்பதியினர் மோட்டார் சைக்கிளில் ஆசியா முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். தற்போது இந்தியா சென்றுள்ள அந்த தம்பதியினர், ஜார்க்கண்ட் மாநிலம்-டும்கா மாவட்டத்துக்கு சென்ற போது, மர்ம நபர்கள் சிலர் வழிமறித்து அவர்களை கொடூரமாக தாக்கி, அந்த பெண்ணை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக இந்தியாவில் உள்ள பிரேசில் தூதரகம் வெளியிட்ட அறிக்கையயடுத்து அந்த மர்ம நபர்களில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்றவர்களையும் தேடும் பணியில் போலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், இது குறித்து அமைச்சர் மனோதங்கராஜ் தனது எக்ஸ் தளத்தில், "66 நாடுகளை மகிழ்ச்சியுடன் கடந்த தம்பதி வட இந்தியாவில் 7 பேரால் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டபோது எழுப்பிய அழுகுரல் மோடியின் காதுகளில் கேட்கவில்லையா?. இது தேசத்தின் அவமானம் என்றார்.



## 'டார்லிங்' சொன்னால் சிறை

அறிமுகமில்லாத பெண்ணை 'டார்லிங்' என்று அழைப்பது பாலியல் துன்புறுத்தலாகக் கருதப்படுவதுடன், சிறை தண்டனையும் வழங்கப்படும் என இந்தியாவின்- கொல்கத்தா உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளபோது, மதுபோதையில் இருந்த ஜானக்ராம் என்பவர் பெண் பொலிஸ் ஒருவரை 'டார்லிங்' என்று அழைத்துள்ளார். இதுதொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த்தையடுத்து, இது தொடர்பான வழக்கும் கீழமை நீதிமன்றத்தில் நடந்தது. இந்த வழக்கில் ஜானக் ராமுக்கு மூன்று மாதங்கள் சிறை தண்டனையும். ரூ.500 அபராதமும் விதிக்கப்பட்டது. இந்த சிறைத் தண்டனையை எதிர்த்து கொல்கத்தா உயர்நீதிமன்றத்தில் ஜானக் ராம் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு மீதான மீதான விசாரணை கொல்கத்தா உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்துள்ளது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி, ஜானக் ராமுக்கு விதித்த மூன்று மாதங்கள் சிறைத் தண்டனையை உறுதி செய்துள்ளார். அதோடு, அறிமுகமில்லாத பெண்ணை 'டார்லிங்' என்று அழைப்பது பாலியல் துன்புறுத்தலாகக் கருதப்படும் என்றார்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# யுனைட்டெட்டை வீழ்த்திய சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற மன்செஸ்டர் யுனைட்டெட் உடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி வென்றது.

சிற்றி சார்பாக பில் பொடென் இரண்டு கோல்களையும், எர்லிங்க் பிறோட் ஹலான்ட் ஒரு கோலையும் பெற்றதோடு, யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்க்கஸ் றஷ்ஃபோர்ட் பெற்றிருந்தார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 63 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் காணப்படுகிறது. 62 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் சிற்றியும், 58 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஆர்சனலும், 55 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அஸ்தன் வில்லாவும் காணப்படுகின்றன. இதில் ஆர்சனல் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.



# மன்னாரில் சொக்கோ மாஸ்டர் சங்கம் உருவாக்கம்

எஸ். றொசேரியன் லெம்பேட்

எம்.என்.எம்.எம். சொக்கோ மாஸ்டர் சங்கமானது மன்னாரில் வைபவ ரீதியாக நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. தலைவராக ஜேசு டெலாஸ் சன் குட்டி, செயலாளராக றெஜிஸ் ராஜநாயகம், பொருளாளராக தட்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது எதிர்காலத்தில் சிரேஷ்ட வீரர்களுக்கான போட்டிகள் நடத்தக் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேலும் சிரேஷ்ட வீரர்களைக் கொண்ட இரண்டு அணிகளை மாவட்டத்தில் உருவாக்குதல், வெளி மாவட்டங்களுக்குச் சென்று போட்டிகளில் கலந்து கொள்ளுதல் என்பவை குறித்தும் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது.

> **நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. தலைவராக ஜேசு டெலாஸ் சன் குட்டி, செயலாளராக றெஜிஸ் ராஜநாயகம், பொருளாளராக தட்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்**



## சூரங்கல் பொதுவிளையாட்டு மைதானக் காணிப் பிரச்சினைக்கு தீர்வு

எப். முபாரக்

கிண்ணியா - சூரங்கல் பொது விளையாட்டு மைதானத்துக்கான காணிப் பிரச்சினை சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேலாக நீண்ட இழுபறியில் இருந்து வந்தது.

அண்மையில் அம்மைதானத்துக்கு விஜயம் செய்த திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் அவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து அப்பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மைதானத்துக்குரிய காணி உரிய முறையில் அடையாளம் காணப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு நேற்று முன்தினம் முதல் அனுமதி கிடைத்துள்ளது.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் மற்றும் கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனி கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொது மக்களும் கலந்துகொண்டதோடு காணிப் பிரச்சினை நிறைவுக்கு வந்துள்ளது.

மைலோ புட்போல் சம்ப்ஸ் 2024 முல்லை தகுதிகாண் போட்டிகள்:

# சம்பியனாகிய இரணைப்பாலை றோ.க.ம.வி, உடையார்கட்டு அ.த.க

மைலோ புட்போல் சம்ப்ஸ் 2024 வட மாகாணத் தொடரின் முல்லைத்தீவு மாவட்ட தகுதிகாண் போட்டிகளில் 10 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டிகளில் இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயமும், பெண்களில் உடையார்கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் சம்பியனாகின.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் அலம்பில் றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயத்தை வென்றே இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம் சம்பியனானது. மூன்றாமிடத்துக்கான போட்டியில் சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தை வென்று குரவில் தமிழ் வித்தியாலயம் மூன்றாமிடத்தைப் பெற்றது.

பெண்களில் அலம்பில் றோமன் கத்தோலிக்க மக்கா வித்தியாலயத்தை வென்று உடையார்கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை சம்பியனானதுடன், மூன்றாமிடத்துக்கான போட்டியில் குரவில் தமிழ் வித்தியாலயத்தை வென்று முத்தையன்கட்டு இடது அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மூன்றாமிடத்தைப் பெற்றது.

12 வயதுக்குட்பட்ட ஆண்களில் சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தை வென்று முல்லைத்தீவு மகா வித்தியாலயம் சம்பியனானதுடன், மூன்றாமிடத்துக்கான போட்டியில் குரவில் தமிழ் வித்தியாலயத்தை வென்று கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தியாலயம் மூன்றாமிடத்தைப் பெற்றது.

பெண்களில் அலம்பில் றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயத்தை வென்று முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க பாடசாலை சம்பியனானதுடன், மூன்றாமிடத்துக்கான போட்டியில் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தை வென்று குமுழமுனை மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தைப் பெற்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 05 மார்ச் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.